# சென்னை புத்தகச் சங்கமம்

உலகப் புத்தக நாள் பெருவிழா | 20-25, ஏப்ரல் 2018

# CHENNAI PUTHAGA SANGAMAM

World Book Day Festival | 20-25, April 2018

பெரியார் திடல், வேப்பேரி, சென்னை-7.

Periyar Thidal, Vepery, Chennai-7.



## விண்ணப்பப் படிவம் / REGISTRATION FORM

- விண்ணப்பப் படிவத்தை நிரப்பி வங்கி வரைவோலை இணைத்து பெரியார் திடலில் உள்ள அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். (காசோலை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது)

  Please fill up the application form and send to the Office in Periyar Thidal along with DD in Favour of "The Periyar Self-Respect Propaganda Institution" (Cheques will not be accepted) • GST No.33AAATT0643C1Z2

1. பங்கு பெறும் நிறுவனத்தின் பெயர்
   Name of the Institution : .......................................................................
2. முகவரி / Address : .......................................................................
   .......................................................................
   .......................................................................
3. தொலைப்பேசி எண் / Tel. No. : .......................................................................
   மின்-அஞ்சல் / E-mail .......................................................................
4. GST No. : .......................................................................
5. அரங்கு எண்ணிக்கை ☑ : ஒன்று [1] இரண்டு [2]
6. அரங்கிற்குரிய வாடகை (சேவை வரியுடன்) :
   Stall Rent (with GST 18%)

| தனி அரங்கு (10 x 10) | 2 அரங்கு (20 x 20) |
|---|---|
| ரூ. 15,000/-<br>(ரூ.12,712 + 2,288) | ரூ. 40,000/-<br>முதல் அரங்கு ரூ. 15,000/-<br>(12,712 + 2,288)<br>இரண்டாவது அரங்கு ரூ.25,000/-<br>(21186 + 3,814) |

7. செலுத்தும் தொகை
   Amount Remitted Rs. : .......................................................................
8. வரைவோலை / வங்கி நிர்வாகக் காசோலை
   மற்றும் தேதி DD /Bankers Cheque No. Date : .......................................................................
9. பெயர்ப் பலகையின் விபரம்
   Banner - Name in capital letters : .......................................................................

(காப்புறுதிக்கான தொகை சேர்த்தே வாடகை வசூலிக்கப்படுகிறது. புத்தகங்களின் காப்புறுதி மதிப்பாக ரூ.1,00,000/- மட்டுமே)

( Insurance Amount is included in the Stall rent - The Insured Value is Rs. 1,00,000/- only )

விண்ணப்பம் அனுப்பக் கடைசி நாள் : 31.03.2018 Application Last Date : 31.03.2018

# சென்னை புத்தகச் சங்கமம்

## உறுதி மேற்கொள்ளுதல்

சென்னை புத்தகச் சங்கமத்தில் பங்கேற்பதற்கான விண்ணப்பப் படிவத்தையும், விதிமுறைகளையும் முழுமையாகப் படித்துப் புரிந்து கொண்டோம். அதில் கூறப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளுக்கும் நாங்கள் கட்டுப்படுவோம். அதை மீறினால் நடப்பு மற்றும் அடுத்து வரும் புத்தகச் சங்கமத்தில் எங்களால் கலந்து கொள்ள இயலாது என்பதனையும் நாங்கள் அறிவோம்.

## UNDERTAKING

We have read & understood and agreed to act in accordance with the RULES & REGULATIONS specified in the Chennai Puthaga Sangamam application form. We understand that the violation of rules in any form will forefeit our participation in the current BOOK FAIR and in future years as well.

## CONDITIONS

★ வங்கி வரைவோலை “**பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம்**“ என்ற பெயரில் மட்டுமே வழங்க வேண்டும்.
Drafts should be drawn in favour of “ The Periyar Self-Respect Propaganda Institution” Chennai. ● GST No.33AAATT0643C1Z2

★ முழுமையான வாடகைத்தொகைக்கான வங்கி வரைவோலை மற்றும் உரிமையாளர் கையொப்பத்துடன் கூடிய விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலிக்கப்படும்.
Application received without full payment of Rent & without authorised signature will not be considered .

★ வங்கி நிர்வாகக் காசோலை சென்னையில் மாற்றத்தக்கவை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.
Only Bankers Cheque or Bank Draft payable at Chennai will be accepted.



## PLEASE NOTE

1. அரங்கத்திற்கான குலுக்கல் முறை கடந்த ஆண்டை போலவோ அல்லது கணினி மூலமோ நடைபெறும்,
   Method of getting numbers in LOT system may be through computer gadgets or in the old system.
2. எந்தவித காரணமும் கூறாமல் எந்த ஒரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் உரிமை நிர்வாக குழுவிற்கு உண்டு.
   The Executive Committee can reject any application for stall without assigning any reason whatsoever.

## WE ACCEPT THE RULES AND REGULATIONS

D.D / Bankers Cheque No. ..........................Dt...................Amount ..................Bank.......................

..........................
Institution Seal

..............................
Participant Signature

please send your completed application along with D.D / Bankers Cheque to the following address
“Chennai Puthaga Sangamam”
Periyar Thidal, 84/1,E.V.K.Sampath Salai, Vepery, Chennai- 600 007.
phone : 044-2661 8161 / 62 / 63

For Office Use Only
APPLICATION RECEIVED ON .......................................................

# சென்னை புத்தகச் சங்கமம்

## விதிமுறைகள்

1. புத்தகச் சங்கமத்தில் புத்தக விற்பனையாளர்கள், புத்தகப் பதிப்பாளர்கள் மற்றும் கல்வி பயிற்றுவித்தல் தொடர்பான குறுந்தகடுகள் விற்பனை செய்யும் மல்டி மீடியாப் பதிப்பாளர்கள் ஆகியோருக்கு மட்டுமே கலந்து கொள்ள அனுமதி அளிக்கப்படும்.

2. அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட புத்தகங்கள் மற்றும் முறையாக உரிமம் பெறாது அச்சிடப்பட்ட நூல்களைக் காட்சிக்கு வைப்பவர்கள், இந்நிகழ்ச்சியில் பங்கு கொள்வதற்கான தங்கள் உரிமையை இழப்பதுடன் - சட்டப்பூர்வமான நடவடிக்கைக்கும் உட்படுத்தப்படுவார்கள்,

3. அரங்க உரிமையாளர்கள் இந்நிகழ்விற்கான அறிவிக்கப்பட்ட நேரத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். புத்தகச் சங்கமம் துவங்குவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்னதாக மட்டுமே அரங்க உரிமையாளர்கள் அரங்கினுள் அனுமதிக்கப்படுவார்கள்.

4. அரங்க உரிமையாளர்கள் 'சென்னை புத்தகச் சங்கமம்' அலுவலகத்திலிருந்து அவ்வப்போது அறிவிக்கப்படும் அறிவிப்புகளைச் செவிமடுத்து புத்தகச் சங்கமம் சிறப்புற நடைபெற உதவ வேண்டும்.

5. அரங்கில் விற்பனை செய்யப்படும் நூல்களுக்கு (விலைபாகுபாடு இல்லாமல்) கண்டிப்பாக 50 விழுக்காடு தள்ளுபடியில் கொடுக்கப்பட வேண்டும். தங்களுக்கு ஒதுக்கப்பட்ட அரங்கத்தில் தாங்கள் விண்ணப்பித்த நிறுவனத்தின் பெயருடன் கூடிய விற்பனைப் பட்டியலை மட்டுமே வாசகர்களுக்கு வழங்க வேண்டும்.

6. தங்களுக்கு அனுமதிக்கப்பட்ட அரங்கத்திற்கு வெளியே புத்தக அலமாரிகள் அமைப்பதோ, வாடிக்கையாளர்களை வழிமறித்து அரங்குக்குள் அழைப்பது, துண்டுப் பிரசுரங்கள் தருவது, சட்டத்திற்கு புறம்பான புத்தகங்களை விற்பனை செய்வது போன்றவை நமது விதிகளுக்கு எதிரானதாகக் கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்ட அரங்கு அகற்றப்படுவதுடன், எதிர்காலத்தில் அரங்கு பெறும் உரிமையையும் இழந்து விடுவர்.

7. தங்களது அரங்குக்குத் தேவையான தளவாடச் சாமான்களான புத்தக அலமாரி, மேசை, நாற்காலி போன்றவற்றை அரங்க உரிமையாளர்கள் தங்கள் பொறுப்பிலேயே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

8. அரங்க உரிமையாளர்கள் தங்களது விற்பனைப் பெருக்கத்திற்காக பரிசுத் திட்டம் அல்லது வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்ய விரும்பினால், சென்னை புத்தகச் சங்கமம் அமைப்பாளர்களின் முன் அனுமதி பெற வேண்டும்.

9. புத்தக அரங்குகளுக்கான வாடகையில் ஒதுக்கப்பட்ட புத்தக அரங்குகளில் தொலைக்காட்சிப் பெட்டிகள், ஒலிப் பெருக்கிகள் அமைக்க அனுமதியில்லை. மல்டி மீடியா அரங்குகள் தவிர்த்து புத்தக அரங்குகளில் தொலைக்காட்சிப் பெட்டிகள் உபயோகப்படுத்தப்படுமேயானால் அவர்களுக்கும், மல்டிமீடியா கட்டணம் வசூலிக்கப்படும். மல்டிமீடியா அரங்குகளில் செய்முறைக் காட்சியாக அமைக்கப்படும் கணினி ஒலி அமைப்புகள் குறிப்பிட்ட வன்பொருள்களை வாங்குவோர்க்கு மட்டுமே கேட்கும் வகையிலான ஹெட்போன் வசதியுடன் இருக்க வேண்டும். இம்முறையில் மட்டுமே குறுந்தகடுகள் பரிசோதிக்கப்பட வேண்டும். புத்தகச் சங்கம நிர்வாகம் அளிக்கும் மின் இணைப்புகள் தவிர்த்து கூடுதல் வசதிகள் தேவைப்படுவோர் 'சென்னை புத்தகச் சங்கமம்' நிர்ணயிக்கும் கட்டணத்தைச் செலுத்தி சாத்தியமான வசதியை பெறலாம். எக்காரணத்தைக் கொண்டும் சென்னை புத்தகச் சங்கம அமைப்பைத் தவிர மற்றவர்கள் ஒலி பெருக்கிகள் அமைக்க அனுமதியில்லை.

10. அரங்கத்திற்கான பெயர்ப் பலகை, அனைத்து அரங்குகளுக்கும் ஒரே மாதிரியான அளவில் இந்நிகழ்வின் அமைப்பாளர்களால் வழங்கப்படும். அப்படி அமைக்கப்படும் பெயர் பலகை, தாங்கள் எந்தப் பெயரில் விண்ணப்பித்துள்ளீர்களோ அந்தப் பெயரில் மட்டுமே அமைக்கப்படும். அப்படி அமைக்கப்பட்டுள்ள பெயர் பலகைகளை மறைத்து வேறு விதமான விளம்பரங்களை கண்டிப்பாகச் செய்யக்கூடாது.

11. அமைப்பாளர்களால் ஒவ்வோர் அரங்குக்கும் குறைந்தப்பட்சமாக ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு லட்சம்) மதிப்பிற்குக் காப்புறுதி செய்யப்படுகிறது. அதிகப்படியான தொகைக்குக் காப்புறுதி செய்ய விரும்புவோர் தங்கள் செலவில் செய்து கொள்ள வேண்டும்.

12. சென்னை புத்தகச் சங்கமம் நிகழ்விற்கு போதுமான அளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அதையும் மீறி ஏற்படும் திருட்டு. ஏமாற்று, கொள்ளை மற்றும் இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் இழப்புகளுக்கு அமைப்பாளர்களால் பொறுப்பு ஏற்க இயலாது. எனவே, அரங்க உரிமையாளர்களே அவ்வப்போது செய்யப்படும் அறிவிப்புகளுக்கு ஏற்ப அதற்கான பாதுகாப்புகளைச் செய்து கொள்ள வேண்டும்.

*மேற்குறிப்பிட்டுள்ள விதிமுறைகளை மீறிச்செயல்படும் அரங்க உரிமையாளர்கள் தொடர்ந்து சென்னை புத்தகச் சங்கமத்தில் பங்கு கொள்ளவும், எதிர்காலத்தில் சென்னை புத்தகச் சங்கமத்தில் பங்கு கொள்ளும் உரிமையையும் இழந்து விடுவார்கள். சென்னை புத்தகச் சங்கமம் குறித்த மேற்கண்ட விதிகளில் மாற்றம் செய்யவோ, புதிய விதிகளைச் சேர்க்கவோ, நிர்வாகக் குழுவிற்கு முழு அதிகாரம் உண்டு. எந்தச் சூழ்நிலையிலும் மேற்கண்ட நிர்வாகக் குழுவின் முடிவே இறுதியானது.*

---

**20.04.2018 அன்று மாலை 5.00 மணிக்கு தொடக்க விழா நடைபெறும்.**

**மற்ற நாட்களில் காட்சி நேரம் : காலை 11.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை**